# இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 18.04.2018

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தவார மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்வதின் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதோடு மட்டும் இல்லாமல் மழைநீர் வழிந்தோடாமல் நிலத்தில் சேமிக்கலாம்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தைப் பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளி கிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 5 – 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோபனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேயவிடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன்காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 35°செ முதல் 39°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செமுதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 4 முதல் 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்ப்பார்கப்படும் மழையை பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் மண்ணில் உள்ள கூண்டு புழுக்களை அழிக்கலாம்.
- ✓ நெல் தரிசு உளுந்து பயிரானது தற்போது முதிர்ச்சி நிலையில் உள்ளதால் முதிர்ந்த காய்களை பறித்து உலர்த்த வேண்டும் அல்லது செடியினை வேரோடு பிடுங்கி குவித்து வைத்து உலர்த்தவும்.
- ✓ உளுந்து விதைகளை சுமார் 9 – 10 சதம் ஈரப்பதத்திற்கு வரும் வரை காயவைக்கவும். சேமிப்பின்போது வண்டுகள் தாக்காமலிருக்க 100 கிலோ விதையுடன் ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் அல்லது ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண்ஹடன் கலந்து சேமிக்கலாம்.

- ✓ கோடை சித்திரை பட்டத்தில் இறவை உளுந்து விதைப்பு செய்யவும். இப்பருவத்தில் விதைப்பு செய்ய ஆடுதுறை 5 மற்றும் வம்பன் 6 ஆகியவை ஏற்ற இரகங்கள்.
- ✓ நெல் தரிசு பருத்தியில் ஏக்கருக்கு 2.5 கிலோ காட்டன் பீளஸ்சை (2.5 கிலோ காட்டன் பீளஸ்சை200 லிட்டர் தண்ணீரில் கலக்கவும்) பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவும்.
- ✓ பண்ணையின் சாணக்கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதால் ஈ மற்றும் கொசுக்கள் முட்டையிடுவதை தவிர்க்கலாம்.

**3.தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 50 முதல் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 12 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், மிளகாயில் பழ அழுகல் நோய் மற்றும் நுனி கருகல் நோய் காணப்படுகிறது. இந்நோயைக்கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.25 சதம் மற்றும் சினெப் 0.15 சதம் தெளிக்கவும். இதனால் பழத்தின் மகசூல் அதிகரிக்கும்.
- ✓ மிளகாயில் இலைப்பேனின் தாக்குதலை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 17.8% SL @ 3 மி.லி./ 10 லிட்டர் தண்ணீர் அல்லது டைமெத்தோயேட் 30% EC @ 1.0 கி/லி என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ கோடை மாதங்களில் கிடைக்கும் எதிர்பாராத மழைப்பொழிவு மண்ணில் ஊடுருவதை மேம்படுத்தவும் களை வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் கோடை உழவு செய்யவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டைகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும்.
- ✓ இவ்வானிலையில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்காவண்ணம் பாதுகாக்க அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசியை போடவேண்டும்.
- ✓ வரும் நாட்களில் அதிக காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழையில் முட்டு கட்டவும். ஒளி புகும் 4 சதவித காற்றோட்டமான பாலியெத்தின் பை கொண்டு குலையினை முடவும். இதனால் பழுப்படையாத ஓரே மாதிரியான அளவு மற்றும் தரத்துடன் பழங்கள் கிடைக்கும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், வாழையில் தண்டுக்கூண்வண்டு தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டபாஸ் 36 WSC @ 1 மி.லி./ 1லி கலந்து தெளிக்கவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், நெல் இலைசுருட்டு புழு தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த பாசலோன் 35 ஈசி 1500 மி.லி/ எக்டர் அல்லது பாஸ்போமிடான் 40 சதம் எஸ்எல் 1250 மி.லி/எக்டர் தெளிக்கவும்

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 34°செ முதல் 35°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 36°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 28°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ முதல் 28°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 90 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 முதல் 12 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நிலவி வரும் வானிலையை கருத்திற்கொண்டு பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு நுண்ணூட்டத்தை தண்ணீர் வழி மற்றும் இலைவழியாக தெளிக்கவும்.

- ✓ பகல் நேர வெப்பிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை நான்கு தவணைகளாக பகிர்ந்து கொடுக்கவும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையை பயன்படுத்தி தென்னைக்கு நுண்ணுயிர் உரமிடுதல் நல்ல பயனளிக்கும். 50 கிராம் அஸோஸ்பைரில்லம் , 50 கிராம் பாஸ்போபாக்டீரியா அல்லது 100 கிராம் அஸோபாஸ் உடன் 50 கிராம் வேர் உட்பூசணத்தை தேவையான அளவு கம்போஸ்ட் அல்லது தொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி 6 மாதங்களுக்கு ஒரு முறை இடவும். இரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களோடு உயிர் உரங்களை கலக்கக்கூடாது.
- ✓ தற்போது நிலவும் வெப்பமான வறண்ட வானிலையின் காரணமாக வாழை பயிரில் செதில் பூச்சியின் தாக்கம் தென்படுகின்றது. உயிரியல் முறையில் இதனை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட பகுதிகளை சேகரித்து அழித்து விடவும், கைலோகோரஸ் நைக்ரிடஸ், ஸ்கிம்னஸ் காக்கிவோரா என்ற பொறி வண்டுகளை வயல்களில் விடலாம்.
- ✓ தற்போது நிலவும் பருவச் சூழ்நிலையில் மிளகு பயிரில் வாடல் நோய்த் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த மற்றும் இந்நோய் வராமல் தடுக்க, ஒரு கொடிக்கு 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி, 10 கிராம் சூடோமோனாஸ் மற்றும் 10 கிராம் பேசிலஸ் ஆகியவற்றை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து மிளகு கொடிகளின் வேர்ப்பகுதியில் நன்கு நனையும்படி ஊற்ற வேண்டும்.
- ✓ நிலவிவரும் தட்பவெப்ப சூழ்நிலையில் முருங்கைப் பயிரில் மொக்குப் புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இதனைக் கட்டுப்படுத்த ஹெக்டேருக்கு 1 லிட்டர் மாலத்தியான் மருந்தினை தெளிக்கலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 12-13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ பெய்துள்ள மழையை பயன்படுத்தி மேராக்காய் நடவு செய்யலாம். குழிக்கு 3 விதை வீதம், 6 அடிx 8 அடி இடைவெளியில் 45 செ.மீ கன அளவு குழியில், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டஸ் இட்டு நடவு செய்யவும்.
- ✓ தேயிலை தோட்டத்தில் சிவப்பு சிலந்தி தாக்குதல் தென்பட்டால், வேப்பெண்ணை அல்லது புரபனோபாஸ் அல்லது டைகோபால் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ நிலவி வரும் அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதம் காரணமாக, பீன்ஸ் பயிரில் ஆன்த்ரக்னோஸ் நோய் பரவி வருகின்றது. கட்டுப்படுத்த, கார்பென்டசிம் மருந்தை ஒரு விட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் பயிரின் மீது தெளிக்கவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படும்.லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 26°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5-8 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தொடர்ந்து லேசான மேகமூட்டமும், லேசான மழைக்கும் வாய்ப்புள்ள வானிலையில், பகல் வெப்பம் உயர்ந்த அளவான 39°செ.ஐ தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது, இரவு வெப்பமும் 27°செ வரை அதிகரிக்கும். ஆயினும், மாலையில் அதிகரிக்கும் காற்றின் வேகத்தாலும், மேகமூட்டத்தாலும், விரைவில் வெப்ப அளவுகள் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோடை காலமாதலால், வெப்ப உயர்வும் அதனைத் தொடர்ந்து வெப்பம் விரைவில் குறையக்கூடிய வானிலை நிகழ்வுகளும் இருப்பது இயல்பு. எனவே, பகலில் காணப்படும் அதிக வெப்பத்தை கோழிகள் தாங்கும் வகையில்

பண்ணைகளில் தீவன மற்றும் குடிநீர் மேலாண்மை அமையவேண்டும். இதனால் கோழிகளில் வெப்பத் தாக்குதலைபெருமளவில் குறைக்கலாம்.

- ✓ தற்போது நிலவி வரும் வெப்பநிலை மற்றும் காற்றின் வேகத்தினால், காய்கனி மற்றும் வேளாண் பயிர்களுக்கு 5 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 முதல் 12 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வெப்பம் அதிகமாக உள்ள பகல் நேரங்களில் கோழிப்பண்ணைகளில் தண்ணீர் தொட்டியை மேல் கூரை அமைத்து குழாய்களை ஈரமான கோணிப்பையால் மூடி கோழிகளுக்கு குளிர்ந்த தண்ணீர் அளிக்குமாறு கேட்டுக்காள்கிறோம்.
- ✓ பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால் கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை உயர்த்தி வைப்பதால் வெப்பதாக்கத்தை குறைக்கலாம். மேலும் குடிநீரில் தாது உப்புகள் மற்றும் B – காம்ளக்ஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அயற்சியிலிருந்து. பாதுகாக்கலாம்.
- ✓ உழவர்கள் கறவை மாடுகளின் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லு மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ உழவர்கள் தங்களுடைய கால்நடைகளின் கொட்டகையின் கூரையின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களில் பரவலாக 63 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது. இந்நாட்களில் அதிகபட்ச வெப்பநிலையாக 34 செ.$^{0}$ மற்றும் காற்றின் ஈரப்பதம் 75 முதல் 80 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ தென்னை மரங்களை சுற்றி வட்டப் பாத்திகள் அமைத்து பசுந்தாள் உரப் பயிர்களை விதைக்கவும்.
- ✓ கிராம்பு மற்றும் இலவங்கபட்டை பயிர் செய்துள்ள நிலத்தில் ஈரப்பதம் வீணாகாமல் தடுக்க பண்ணை கழிவுகளை கொண்டு நிலப்போர்வை செய்வது நல்லது.
- ✓ பயறு வகை செடிகளில் காய் புழு தாக்கம் ஆங்காங்கே தென்படுவதால் இன்டாக்ஸ்காப் ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மில்லி கிராம் வீதம் கலந்து தெளிக்கவும்.
- ✓ மலர்களுக்கு மழை நீர் தேங்காத வண்ணம் நல்ல வடிகால் வசதி அமைத்து கொடுக்கவும். அதோடு தொடர்ந்து மழை இருப்பதால் காலையில் மலர்களை அறுவடை செய்ய சிரமமாக இருப்பின் மாலை நேரங்களில் அறுவடை செய்யலாம்.
- ✓ மரவள்ளியில் மாவுபூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த மீன் அமில சோப்பை ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் வீதம் கலந்து தெளிக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**